# தியாகராசர் பலதொழில் நுட்பக் கல்லூரி, சேலம்–636 005

## Circular

No.14 /Exam Cell/Grace chance/2022 16.09.2022

பார்வை: 1. அரசாணை(நிலை)எண்.157, உயர்கல்வி(பி1)துறை, நாள் 10.08.2021.
2. தொழில் நுட்பக் கல்வி இயக்கக கடித எண்.116776/M1/OCT 2022/Fee Collection, dated 07.09.2022.

---

பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்கல்வித்துறை அரசாணை மற்றும் தொழில் நுட்பக் கல்வி இயக்கக கடிதத்தின்படி பலதொழில் நுட்ப பயிலகத்தில் மூன்று/இரண்டு ஆண்டுகாலம் படித்து முடித்துவிட்டு இன்னும் சில பாடங்களில் தேர்ச்சி பெறாத பழைய மாணவ மாணவிகளுக்கு கருணை அடிப்படையில் கீழ்கண்ட தேர்வில் மீண்டும் எழுதுவதற்கு அனுமதி அளித்துள்ளார்கள்.

- நவம்பர் 2022 நடைபெறும் தேர்வு (4 of 4) - இறுதி வாய்ப்பு

உயர்கல்வித்துறை அரசாணைபடி, நமது பயிலகத்தில் 1987ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை சேர்ந்து மூன்று/இரண்டு ஆண்டுகாலம் கல்லூரியில் படித்து முடித்து விட்டு தன்னாட்சி தேர்வுகளில் இன்னும் சில பாடங்களில் தேர்ச்சிப் பெறாத (அனைத்து சலுகை காலங்களும் முடிவு பெற்ற) பழைய மாணவ மாணவிகளும் கருணை அடிப்படையில் நவம்பர் 2022 நடைபெறும் தேர்வில் எழுதலாம்.

பழைய மாணவ/மாணவியர்கள் தற்போது நடைமுறையில் உள்ள பாடத்திட்டம் மற்றும் வினாத்தாள்படி தேர்வு எழுதவேண்டும்.

சிறப்பு வாய்ப்பு அடிப்படையில் பட்டயத் தேர்வு எழுதும் மாணாக்கர்கள், அவர்கள் வைத்துள்ள நிலுவைத் பாடங்கள் அனைத்திற்கும் தேர்வுக் கட்டணம் செலுத்தாமல், அவர்கள் தேர்வு எழுத விரும்பும் நிலுவைப் பாடங்களுக்கு மட்டும் தேர்வு கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்க அனுமதி அளிக்கப்படுகிறது.

இந்த அறிக்கை குறித்து துறைத் தலைவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்களது துறையை சார்ந்த பழைய மாணவ மாணவிகளுக்கு கடிதம், மின்னஞ்சல், தொலைபேசி அல்லது அலைபேசி மூலமாக தெரியப்படுத்தவும்.

**நவம்பர் 2022 தேர்வுக்கட்டணம்:**

| | |
|---|---|
| பதிவு கட்டணம் | : ரூ. 750/- |
| தேர்வு கட்டணம் | : ரூ. 150/- per course |
| மதிப்பெண் பட்டியல் கட்டணம் | : ரூ. 50/- |

| | |
|---|---|
| அபராதமின்றி தேர்வுக் கட்டணம் செலுத்த கடைசி நாள் | 23.09.2022 (Fri) |
| அபராதத்துடன் தேர்வுக் கட்டணம் செலுத்த கடைசி நாள் (Fine Rs. 150/-) | 30.09.2022 (Fri) |
| Tatkal அபராதத்துடன் தேர்வுக்கட்டணம் செலுத்த கடைசி நாள் (Fine Rs. 750/-) | 11.11.2022 (Fri) |

இந்த சுற்றறிக்கை மற்றும் தேர்வுக்குரிய விண்ணப்ப படிவம் நமது பயிலகத்தின் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

THIAGARAJAR POLYTECHNIC COLLEGE
16 SEP 2022
Autonomous Exam Cell, SALEM.

முதல்வர்

நகல்
Cc to all HODs/HOSs

I. e-circulation 2. Staff Notice Board 3. Students Notice Board

---

II. For Office Use

☐ OS ☐ Establishment ☐ Accounts ☐ Stores ☐ Autonomous Examination Cell ☐ PA to PL

Scanned by CamScanner